## வேத வ்யாச பட்டர்
## வாழி திருநாமம்

தெண்டிரை சூழ் திருவரங்கம் செழிக்க வந்தோன் வாழியே
தென்னரங்கர் மைந்தன் எனச் சிறக்க வந்தோன் வாழியே
பண்டிதராம் எதிராசர் பதம் பணிந்தோன் வாழியே
பாடியத்தின் உட்பொருளைப் பகர்ந்துரைப்போன் வாழியே
மண்டு புகழ்க் கூரனார் மகிழ்ந்த செல்வன் வாழியே
வைகாசி அநுடத்தில் பார் உதித்தான் வாழியே
எண்டிசையும் சீர் எம்பார் பதம் பணிந்தோன் வாழியே
எழில் சீராமப் பிள்ளை இணையடிகள் வாழியே

---